தலைமைக் குற்றவியல் நடுவர்/சிறப்பு நீதிபதி அவர்கள், இராமநாதபுரம் கோர்ட்

TAMIL NADU POLICE

# FIRST INFORMATION REPORT

INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051802

1. District : மாவட்டம் இராமநாதபுரம் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 5/20 Date: நாள் 4-11-20.

2. (i) Act சட்டம்: Pc (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(A) of PC
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: (Amendment)
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03-11-20 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 1200 மணி Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04-11-20 Time நேரம் 06.30 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் கிழக்கு 3 கி.மீ தொலைவு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார் ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. கனகசேகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பரமசிவம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.3.1963 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் பெட்டிக்கடை (g) Address : முகவரி 7/107 அல்லாவாய்க்கரைத்தெரு, கீழக்கரை ரோடு, இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   சிங்காரம், வாகன ஓட்டுநர், சார் ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகார்தாரரின் மனு மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : இன்று 04-11-2020 இன்று காலை 06.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்டம், அலவாய்க்கரைவாடி கிராமத்தைச் சேர்ந்த பஞ்சவர்னம் மகன் P.தனசேகரன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த மனுவை பெற்று, மேற்படி மனுவின் மீது முறையான விசாரணை மேற்கொண்டு அதை தொடர்ந்து வாதி மற்றும் எதிரி ஆகியோரது முன் நடத்தை விபரங்களை சேகரித்து இன்று காலை 07.40 மணிக்கு இராமநாதபுரம் ஊ.த.க பிரிவு கு.எண் 5/2020 பிரிவு 7(A) of Prevention of Corruption (Amendment) Act, 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.தனசேகரன், வயது 57 த/பெ பஞ்சவர்னம்,7/107 அலவாய்க்கரைவாடி, கீழக்கரை போஸ்ட், இராமநாதபுரம் மாவட்டம் பெறுநர் உயர்திரு.காவல் துணை கணகாணிப்பாளர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4.11.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 04-11-20 09 30 மணி.

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை .................... No. எண் ..........
ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.5/2020 பிரிவு 7() ஊழல் தடுப்புசட்டம் (திருத்தம்) 2018ன் தொடர்ச்சி:

அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கீழக்கரை அண்ணா நகரில் எனக்கு சொந்தமான இடத்தில் பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். மேற்படி கடை இருக்கும் இடத்தில் உள்ள தாரசு கட்டிடத்தில் தீபாவளியை முன்னிட்டு தற்காலிகமாக வெடிக்கடை வைப்பதற்கு தற்காலிக உரிமம் பெற ஆன்லைன் மூலம் 16.09.2020 ஆம்தேதி விண்ணப்பம் பதிவேற்றம் செய்தேன். இது தொடர்பாக கீழக்கரை தாசில்தார் சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு நேரில் வந்து மேற்படி கட்டிடத்தை ஆய்வு செய்து அறிக்கையை இராமநாதபுரம் சார் ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைப்பதாக கூறினார். அதன் பேரில் 02.11.2020 ஆம்தேதி மாலை சுமார் 4.15 மணிக்கு சார ஆட்சியர் இராமநாதபுரம் அவர்கள் நேரில் வந்து எனது கட்டிடத்தை ஆய்வு செய்து, எனது ஆவணங்களை சரி பார்த்து சென்றார். அச்சமயம் சாரஆட்சியரின் கார் டிரைவர் சிங்காரம் அவர்கள் உரிமம் சம்பந்தமாக நாளை காலை சார ஆட்சியர் அலுவலகம் வந்து அவரை சந்திக்குமாறு கூறினார். இதற்கிடையில் எங்க ஊரைச் சேர்ந்த தங்கச்சாமி மகன் லெட்சுமணன் என்பவரும் தற்காலிக உரிமம் வேண்டி விண்ணப்பத்திருந்தார். அதன் பேரில் நானும், லெட்சுமணனும் 03.11.2020 பகல் சுமார் 12.00 மணியளவில் இராமநாதபுரம் சார்ஆட்சியர் அலுவலகம் சென்றோம். அப்பொழுது டிரைவர் சிங்காரம் என் அருகில் வந்து உரிமம் பெற சார்ஆட்சியருக்கு லஞ்சமாக ரூபாய் 10,000/– கொடுக்கனும் எனக்கேட்டார். நான் கஷ்டப்படுவதாகவும் பணத்தை கொஞ்சம் குறைத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு டிரைவர் சிங்காரம் எல்லோரையும் போலத் தான் உங்களிடம் ரூபாய் 10,000/– கேட்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். கார் டிரைவர் சிங்காரம் கேட்ட லஞ்சப்பணம்விபரம் லெட்சுமணனிடம் கூறினேன் அதற்கு

ரூபாய் 10,000/-ஐ கொடுக்க லெட்சுமணன் தயாராக இருந்தார். பின்னர் நான் பிறபகல் சுமார் 3.00 மணிக்கு மீண்டும் கார் டிரைவர் சிங்காரத்தின் போன் நம்பர் 9788055661 என்ற எண்ணிற்கு எனது செல்போன் எண் 9976033842 எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு தொகையை குறைத்துக் கொள்ளுமாறு சொன்னதற்கு போனில் இது பற்றி பேசாதீர்கள் நேரில் வாங்க பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார். அதன் பேரில் நான் மீண்டும் மாலை சுமார் 4.00 மணிக்கு சார்ஆட்சியர் அலுவலகம் சென்று கார் டிரைவர் சிங்காரத்தை சந்தித்து பணத்தை குறைத்துக் கொள்ளுமாறு கூறினேன். அதெல்லாம் குறைக்க முடியாது இன்று இரவே பைல் இங்கிருந்து கலெக்டர் ஆபிசிற்கு போய்விடும் என்று கூறினார். இந்நிலையில் மேற்படி லெட்சுமணன் தனக்கு வேலை இருப்பதால் ரூபாய் 10,000/- என்னிடம் கொடுத்து டிரைவர் சிங்காரத்திடம் கொடுக்கச் சொன்னார். கார் டிரைவர் சிங்காரத்திற்கு கொடுக்க என்னிடம் ரூபாய் 5,000/- மட்டும் தான் உள்ளது. எனவே, மேற்படி லஞ்சப்பணத்தை கொடுத்து வெடிக்கடை உரிமம் பெற எனக்கு விருப்பம் இல்லாத காரணத்தினால் என்னிடம் லஞ்சம் கேட்ட சார் ஆட்சியரின் கார் டிரைவர் திரு.சிங்காரம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு P.தனசேகரன் 04-11-2020. அய்யா, 04-11-2020 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு புகாரை பெற்று மேற்படி வாதி மற்றும் எதிரி ஆகியோரது முன் நடத்தை விபரங்களை சேகரித்தும், இராமநாதபுரம் ஊ.த.க பிரிவு கு.எண். 05/2020 பிரிவு 7(A) of Prevention of Corruption (Amendment) Act, 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன்.(Sd) M.Kumersan, Inspector of Police, V&AC, Ramanathapuram, 04.11.2020.

இதன் அசலை வாதியின் புகாருடன் இணைத்து இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை எனது விசாரணைக்கு வைத்துக்கொண்டேன்.

04/11/2020

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.